**மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2022**

மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வுப் பிரிவில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு கீழ் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாண சபையில் பணி புரியும் பொ.நி.சு. 03/2016 இற்கமைய MN-2-2016 அல்லது அதனிலும் உயர்ந்த சம்பளத் தொகுதியின் கீழ் சம்பளம் பெறும் பதவிக்கு அல்லது சேவையிற்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொதுத் தகைமைகள் :

1.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
1.2 சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
1.3 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1.4 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
1.5 தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
1.6 அரச சேவையின் அல்லது மாகாண அரச சேவையின் தடுப்புப் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

02. கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் : -

இங்கு குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் **2022.11.28** ஆம் திகதியன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டங்கள் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகத்திற்கான உயர் தேசிய டிப்ளோமா பெற்றவராக இருத்தல்.

அல்லது

இலங்கை பட்டய காணக்காளர் நிறுவனத்தின் அல்லது வேறேதும் பொதுநலவாய நாடொன்றின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவம் பெற்றிருத்தல் அல்லது உள்ளக இடைநிலைப் பரீட்சையில் அல்லது அதனிலும் உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

மாகாண அரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடைய, பொ.நி.சு. 03/2016 இற்கமைய MN-2-2016 அல்லது அதனிலும் உயர்ந்த சம்பளத் தொகுதியின் கீழ் சம்பளம் பெறும் பதவியில் / சேவையில் குறைந்த பட்சம் 05 வருடம் முனைப்பான மற்றும் சராசரியிலும் கூடிய திருப்திகரமான செயலாற்றுகை மட்டத்தைக் கொண்ட சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல்

அல்லது

II. மாகாண அரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடைய, பொ.நி.சு. 03/2016 இற்கமைய MN-2-2016 அல்லது அதனிலும் உயர்ந்த சம்பளத் தொகுதியின் கீழ் சம்பளம் பெறும் பதவியில் / சேவையில் குறைந்த பட்சம் 10 வருடம் முனைப்பான மற்றும் சராசரியிலும் கூடிய திருப்திகரமான செயலாற்றுகை மட்டத்தைக் கொண்ட சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல்

03. **சம்பளம் :-**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் III, II மற்றும் I இற்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :

ரூபா. 31,490 – 10x445 -11 x 660 – 10 x 730 – 5 x 750– ரூபா. 54,250 ஆகும். (MN 4-2016). அத்துடன் இச்சம்பளமானது நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து செலுத்தப்படும்.

ரூபா. 35,940/- ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரமுயர்வும், ரூபா. 43,200/- ஐக் கடந்து செல்வதற்காக தரம் I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும் இதற்கு மேலதிகமாக அரசினால் அரச அலுவலர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

04. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-**

இப்பதவிற்கு உரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

05. **ஆட்சேர்ப்பு முறை:-**

மேலே பந்தி 02 இல் குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள, மத்திய மாகாண அரச சேவையில் நிந்தர நியமனம் வகித்து அப்பதவியில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பொ.நி.சு. 03/2016 இற்கமைய MN-2-2016 அல்லது அதனிலும் உயர்ந்த சம்பளத் தொகுதியின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்போட்டிப் பரீட்சைக்கு உள்வாங்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்களின் விருப்பின் படி ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நடாத்தப்படும் புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறையின் அடிப்படையில் வெற்றிட எண்ணிக்கையின் ஐம்பது சதவீதமானோர் (50%) நேர்முகப்பரீட்சைக்கு உள்வாங்கப்பட்டு உரிய தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

06. **சேவை நிபந்தனைகள் :-**

6.1 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

6.2 மத்திய மாகாண அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2022.05.31 ஆந் திகதி கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட மத்திய மாகாண உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் விதிந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகளுக்கும் மற்றும் அவ் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தங்களிற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தரம் III இலுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6.3 இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். அவர்களின் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். மத்திய மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் இதற்கு முன்னர் வகித்த பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் இவ் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடையும் தேவையிலிருந்து மாத்திரம் விலக்களிக்கப்படுவர்.

6.4 இந்நியமனமானது அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு உட்பட்டதாகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை:-**

அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிறப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். வேறு வருமானத் தலைப்பிற்கு பணமாக செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டினை ஒட்டி அல்லது பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது.

தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பும் போது அந்தந்த நிறுவனங்களுக்கு ஏற்படும் எழுதுபொருள் செலவுகள் மற்றும் அதிகப்படியான தபால் கட்டண செலவினைக் குறைக்கும் நடவடிக்கையாக, இப்பரீட்கைகான விண்ணப்பங்கள் நிகழ்நிலை (Online) மூலம் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பான விபரம் பின்வருமாறு.

(I). விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை நிரப்புவதற்காக கூகுல் பத்திரம் (Google Form) ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் இணைப்பு (Hyperlink) உங்களது நிறுவனத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சலினூடாக அனுப்பி வைக்கப்படும். (இதனை உங்களது நிறுவனத்தின் கீழுள்ள துணை நிறுவனங்கள் இருப்பின் அவைகளுக்கு அல்லாமல் வேறு வெளி பிரிவினருக்கு அனுப்பலாகாது)

(II). ஒவ்வொரு நிறுவனத்திலும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க உத்தேசித்துள்ள விண்ணப்பதாரிகளின் விபரங்கள் அந்நிறுவனத்தின் மூலம் சேகரிக்கப்பட்டு உரிய விடய பொறுப்பு உத்தயோகத்தரினால் (அல்லது பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரினால்) உரிய கூகுல் பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு சமர்பிக்கப்பட வேண்டும்.

(விண்ணப்பதாரர்கள் தங்களது தகவல்களை விடய பொறுப்பு அலுவலரிடம் சமர்பிப்பதற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் விண்ணப்பப்பத்திரத்தினை பூர்த்தி செய்து வழங்க முடியுமென்பதுடன், விடய பொறுப்பு உத்தயோகத்தர் (அல்லது பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர்) அவ்விண்ணப்பப்பத்திரத்தில் நிறுவனத் தலைவரின் பரிந்துரையைப் பெற்று அத்தகவல்களை மிகவும் சரியாக கூகுல் பத்திரத்தில் உள்ளிட வேண்டும்.)

(III). இங்கு நிறுவனத் தலைவரினால் உரிய விண்ணப்பப்பத்திரத்திலுள்ள தகைமைகள், அவரது ஆள்சார்புக் கோவையுடன் பரீட்சித்து உறுதிப்படுத்தியதன் பின்னர் பரிந்துரை செய்ய வேண்டும்.

(IV). விண்ணப்பதாரி பணி புரியும் சேவை நிலையத்திற்கு வெளியே உள்ள நிறுவனத்தினால் அவரது ஆட்சார்புக் கோவை பராமரிக்கப்படும் சந்தர்ப்பத்தில், ஆட்சார்புக் கோவை பராமரிக்கப்படும் நிறுவனத்திற்கு உரிய விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும். அந்நிறுவனத்திலுள்ள விடய பொறுப்பு உத்தயோகத்தர் (அல்லது பொருத்தமான உத்தியோகத்தர்) அவ்விண்ணப்பப்பத்திரத்திலுள்ள தகவல்களை கூகுல் பத்திரத்தில் உள்ளிட வேண்டும்.

(V). விண்ணப்பதாரி பரீட்சைக் கட்டணத்தை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்பட்ட நீல நிற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் ஒட்டி, விடய பொறுப்பு உத்தியோகத்தரிடம் சமர்பிக்க வேண்டும். பின்னர் விடய பொறுப்பு உத்தியோகத்தர் அப்பற்றுச் சீட்டினை ஸ்கேன் (Scan) செய்து அல்லது தெளிவான புகைப்படத்தினைப் பெற்று அதன் மென் பிரதியினை கூகுல் பத்திரத்தில் பதிவேற்ற வேண்டும். அவ்வாறே

a. விண்ணப்பப்படிவம்
b. நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் பதவிக்குரிய நியமனக் கடிதத்தின் பிரதி
c. நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட உரிய கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள்

ஆகிய ஆவணங்களை ஸ்கேன் (Scan) செய்து PDF வடிவில் மாற்றி கூகுல் பத்திரத்தில் உள்ளிட வேண்டும்.

(VI). விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை பற்றி தனிப்பட்ட முறையில் விண்ணப்பதாரிக்கு SMS மூலமாக அல்லது உரிய நிறுவனத்திற்கு மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும்.

(VII). விண்ணப்பதாரரினால் சமர்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலப் பிரதி அவரது ஆள்சார்புக் கோவையில் இணைக்கப்படல் வேண்டும்.

(VIII). விண்ணப்பப்படிவங்கள் தபாலினூடாக **அனுப்பலாகாது.** கூகுல் பத்திரத்தினூடாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(IX). விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் இக்கூகுல் பத்திரம் அகற்றப்படும்.

குறிப்பு

இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் நிறுவனத் தலைவரின் மூலம் சான்றுபடுத்திய மத்திய மாகாண அரச சேவையில் தற்போது வகிக்கும் பதவிற்குரிய நியமனக் கடிதத்தின் பிரதி மற்றும் உரிய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் ஆகியவற்றினை தான் சேவையாற்றும் நிறுவனத்தின் உரிய அலுவலரிடம் சமர்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை (Online) மூலம் உள்வாங்கப்படும் இறுதித் திகதி **2022.11.28** ஆகையால் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை உரிய அலுவலரிடம் போதியளவு காலத்திற்கு முன்னர் பூரணப்படுத்தி சமர்பிக்க வேண்டும்.

08. **பரீட்சை ஊடகம்**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

09. **பரீட்சை நிலையம்**

இப்பரீட்சையான கண்டி நகரில் மாத்திரம் அல்லது விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் நிரந்தர வதிவிட மாவட்டத்தின் அடிப்படையில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய நகரங்களில் அல்லது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

10. **எழுத்துப் பரீட்சை மற்றும் பாடவிதானம்**

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பதாரிகள் பின்வரும் பரீட்சை செயற்றிட்டத்தின் கீழ் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

| **பாடங்கள்** | **பாட உள்ளடக்கம்** | **ஆகக் கூடிய புள்ளிகள்** | **சித்தியெய்த வேண்டிய புள்ளிகள்** |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக முறைமை | அரசாங்க சேவையில் பல்வேறுபட்ட சூழலில் தோன்றக்கூடிய பிரச்சினை ஒன்று அல்லது சிலவற்றினை தொடர்புபடுத்தி கட்டயெழுப்பப்படும் ஒரு நிகழ்வினை அல்லது நிகழ்வுகளை பரீட்சார்த்திக்கு முன்வைத்து தாபன விதிக்கோவையின் அடிப்படையில் பரீசார்த்தி அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஆற்றல் மற்றும் அவரின் ஆக்கப்பூர்வமான சிந்தனைத் திறன் ஆகியவற்றை பரீட்சித்தல் மற்றும் அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைமை தொடர்பிலான அடிப்படை அறிவு மற்றும் அவ்வறிவினை செயற்படுத்தும் திறன் என்பவற்றை பரீட்சித்தல் | 100 | 40 |

| | | | |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம், மாகாண நிதி ஒழுங்குவிதிகள், மற்றும் உள்ளக கணக்காய்வு தொடர்பான அறிவு | நிதிப் பிரமாணம் அத்தியாயம் I, II, III, IV, V , மாகாண நிதி ஒழுங்குவிதிகள் அத்தியாயம் I, II, III, IV, V மற்றும் உள்ளக கணக்காய்வு தத்துவம் மற்றும் கோட்பாடு | 100 | 40 |

11. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் (விண்ணப்பதாரியின் கவனத்திற்கு)

11.1. மாதிரி விண்ணப்பத்திற்கமைய A4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-3 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும்.

11.2. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மிகவும் விருப்பமான நகரங்கள் 02 இனைக் (கண்டி/ மாத்தளை/ நுவரெலியா ஆகியவற்றில்) ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

11.3. மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு திணைக்களத் தலைவரினால் விண்ணப்பதாரி தொடர்பில் பரிந்துரையை சமர்பிக்க வேண்டும்

11.4. அனைத்து தகவல்களையும் பூரணப்படுத்தல் வேண்டும்.

12. கூகுல் பத்திரத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல் (விடய பொறுப்பு உத்தியோகத்தர்/ பொருத்தமான உத்தியோகத்தர் கவனத்திற்கு)

12.1. முதலில் தம்மிடம் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூரணப்படுத்தப் படவேண்டிய அனைத்து தகவல்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா எனப் பரீட்சிக்கவும். அத்துடன் இணைப்புகளாக சமர்பிக்க வேண்டிய பின்வரும் ஆவணங்கள் அனைத்தும் சமர்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சிக்க

(I). பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நீல நிற பற்றுச்சீட்டு

(II). நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் பதவிக்குரிய நியமனக் கடிதத்தின் பிரதி

(III). நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட உரிய கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள்

இதில் ஏதேனும் குறைப்பாடுகள் காணப்படின் கூகுல் பத்திரத்தினை நிரப்புவதற்கு முன்னர் அவற்றினைப் பூரணப்படுத்தவும்

12.2. ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் கூகுல் பத்திரத்தில் தனித்தனியாக பதிவேற்ற (Upload) வேண்டியுள்ளதால் அவற்றைத் தனித்தனியாக ஸ்கேன் (Scan) செய்துக் PDF வடிவிற்கு மாற்றிக் கொள்ளவும்

12.3. உங்களது நிறுவனத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சலினைப் பார்க்கவும்

12.4. எமது ஆணைக்குழுவின் பரீட்சை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் மின்னஞ்சல் முகவரியான exam.psc.cp.gov@gmail.com இன் மூலம் உங்களது நிறுவனத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சலிற்கு அனுப்பப்பட்டுள்ள இணைப்பினூடாக கூகுல் பத்திரத்தினை அணுக முடியும்

12.5. கூகுல் பத்திரத்தினைப் பூரணப்படுத்தும் உங்களது நிறுவனத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியினைக் உள்ளிடவும்

12.6. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களை மிகவும் சரியாக கூகுல் பத்திரத்தில் உள்ளிடவும். தகவல்களை உள்ளிடுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய மொழி ஊடகம் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் சிங்கள மொழி மூலம் உள்ளிடவும்

12.7. தகவல்களை உள்ளிடுவதற்கு யுனிகோட் (Unicode) எழுத்து மாத்திரம் பாவித்தல் வேண்டும் (Iskoola pota).

12.8. இறுதிப் பகுதியில் விண்ணப்பதாரியின் பற்றுச்சீட்டு, நியமனக் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் என்பவற்றை பதிவேற்றவும் (Upload).

12.9. கடைசியில் ''Submit'' மூலம் தகவல்கள் உள்ளடக்கும் செயற்பாட்டை பூர்த்தி செய்யவும்.

13. ஆட்சேர்ப்பு அறிவித்தலின் அடிப்படையில் நியமனம் வழங்க முன்னர், வழங்கிய பின்னர், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

14. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் நியமனம் பெறும் பொருட்டு திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

15. ஆபேட்சகரின் ஆளடையாளம்

இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய ஆள்அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

16. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

17. இதன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

கை/இ: டீ.ஏ.டி.டப்லிவ். தயானந்த,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாணம்

2020 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

<u>மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2022</u>

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(இவ் அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தைக் குறிப்பிடவும், இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

01. விண்ணப்பதாரரின்

1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..............................................................
..............................................................
..............................................................

1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................
..............................................................
..............................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..............................................................
..............................................................
..............................................................

02. சேவை நிலையமும் அதன் முகவரியும்

2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : --
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) ..............................................................
..............................................................
..............................................................

2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -
(சிங்களத்தில்/ தமிழில்) ..............................................................
..............................................................
..............................................................

2.3 பணிபுரியும் சேவை நிலையத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி (பிரவேச அட்டை அனுப்ப வேண்டியதற்கு):
..............................................................
..............................................................

03. 3.1 பால் (பெண் -1, ஆண் – 0)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்

3.2 பிறந்த திகதி :- ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி : | | |

3.3 தேசிய ஆளடையாள அட்டை இல: | | | | | | | | | | | | |

3.4 தொலைப் பேசி இலக்கம்: - | | | | | | | | | | |

3.5 நிரந்தர வதிவிட மாவட்டம் :- ...........................................

04. சேவை விபரங்கள் :-

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் நிறுவனத்தின் பெயர் : ..........................................................

..........................................................................................................................

4.2 அதற்குறிய அமைச்சு அல்லது திணைக்களம் : ..........................................................

..........................................................................................................................

4.3 உமது ஆள்சார்புக் கோவை பேணப்பட்டு வரும் அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவரை தெளிவாகக் குறிப்பிடவும் : ..........................................................

4.4 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் : ..........................................................

4.5 தற்போது வகிக்கும் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ..........................................................

4.6 தற்போதைய பதவி நிரந்தரமானதா? தற்காலிகமானதா?: ..........................................................

4.7 தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? : ..........................................................

4.8 சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தகைமையடைந்த திகதி : ..........................................................

4.9 தற்போது வகிக்கும் பதவியின் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கமும் திகதியும் ..........................................................

4.10 தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய) : ..........................................................

4.11 சம்பள அளவுத் திட்டம் (25.02.2016 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைக்கமைய) : ..........................................................

4.12 தற்போதைய பதவி ஓய்வூதியம் உரித்துடையதா? :- ..........................................................

4.13 2022.11.28 ஆந் திகதியில் தற்போதைய பதவியில் மொத்தச் சேவைக்காலம் : .............

05. கல்வித் தகைமைகள்

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள் | கால வரையறை | சித்தி | சான்றிதழ் திகதியும் இலக்கமும் |
|---|---|---|---|---|
| | | | | |

06. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :

6.1 பணம் செலுத்திய பிரதேச செயலகம்: ..............................

6.2 பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதி : ..............................

6.3 செலுத்திய தொகை : ..............................

| |
|---|
| நீல நிறப் பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும் |

இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகின்றேன். இத்துடன் தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால், அச்செம்மையின்மை நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

..............................

திகதி : ..............................

பரீட்சார்த்தியின் கையொப்பம்
(நிறுவனத் தலைவர் முன்னிலையில்)

குறிப்பு :- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

<u>**கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**</u>

எனது அலுவலகத்தின் அலுவலரான திரு/ திருமதி/ செல்வி .............................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் .............................. ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி : ..............................

பெயர் : ..............................

பதவிப்பெயர் : ..............................

முகவரி : ..............................

**<u>திணைக்களத் தலைவரின் சான்றிதழ்</u>**

1. இவ்விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ................................................................................................ இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும்,
2. அவர் நிரந்தர பதவியொன்றினை வகிக்கின்றாரெனவும்,
3. அவர் 2022.11.28 ஆம் திகதிக்கு சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒருவரெனவும்,
4. நிரந்தரப் பதவியொன்றின் சேவையில் உறுதிப்படுத்திய கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும்,
5. அவர் 2022.11.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆகக்குறைந்தது **05/ 10** ஆண்டுகள் முனைப்பான சேவையினைப் பூர்த்தி செய்துள்ளாரெனவும்
6. அவர் இவ்வறிவித்தலின் 2.0 பந்தியில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அடங்கும் வேதனத்தைப் பெறுகின்றாரெனவும் அல்லது வேதன திட்டத்தில் உள்ளாரெனவும்
7. அவர் 2022.11.28 ஆந் திகதிக்கு 01/2020 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனை எதுவும் பெறவில்லை எனவும்,
8. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும்,
9. பரீட்சைக் கட்டணமாக ரூபா 600/- இனை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும்,
10. அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இந்நிறுவனத்திலுள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளன எனவும் இப்பரீட்சை சம்பந்தமான அறிவிப்பில் காணப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்)

................................................................................................

திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி : ................................................................

பெயர் : ................................................................

பதவிப்பெயர் : ................................................................

முகவரி : ................................................................

குறிப்பு : -

1. இச்சான்றிதழில், திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட முறையாக அதிகாரம் பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே கையொப்பமிடுதல் வேண்டும். சான்றிதழ் அளிக்கும் உத்தியோகத்தர் சான்றிதழில் தரப்பட்டுள்ள விபரங்கள் எல்லா வகையிலும் சரியானவையெனத் திருப்தியடைதல் வேண்டும்.

2. எல்லா வகையிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படலாகாது.